பிரஸார் பாரதி

அகில இந்தியவானொலி, சென்னை

10 06 2024 **MONDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமரின் வீட்டுவசதித்திட்டத்தின்கீழ், ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் மூன்று கோடி வீடுகளை கட்டுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஏழை, இளையோர், விவசாயிகள் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.
3. புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.
4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. **Portland** சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Gulveer Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இனி விரிவான செய்திகள் ----

<<<<<<<>>>>>>

பிரதமரின் வீட்டுவசதித்திட்டத்தின்கீழ், ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் மூன்று கோடி வீடுகளை கட்டுவதற்கு நிதியுதவி வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

வீட்டுவசதி கோரி பெறப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக ஏஜென்சி செய்தி தெரிவிக்கிறது.

முன்னதாக, தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமராக பொறுப்பேற்றுக்கொண்ட திரு நரேந்திர மோடி, விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டத்தின்கீழ் 17-ஆவது தவணைத் தொகையினை விடுவிப்பதற்கான கோப்பில் கையெழுத்திட்டார்.

<<<<<<<>>>>>>

விவசாயிகளின் நலனில் பிஜேபி தலைமையிலான அரசு உறுதியுடன் உள்ளது என்பதை பிரதமரின் முதல் கையெழுத்தே உறுதி செய்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தொடர்ந்து மூன்றாவது முறையாக பொறுப்பேற்றுள்ள தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, விவசாயிகளுடன் நட்புறவு கொண்ட அரசாக திகழும் என்று கூறியுள்ளார்.

விவசாயிகளின் குறைகளை களைவதற்கும், அவர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கும் மத்திய அரசு தொடர்ந்து பாடுபடும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதை பிரதமரின் முதல் கையெழுத்து உணர்த்தியுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டத்தின்கீழ் 17-ஆவது தவணைத்தொகையை விடுவிப்பதற்கான கோப்பில் பிரதமர் கையெழுத்திட்டத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

20 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டதன் மூலம், ஒன்பது கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைவார்கள் என்றும் திரு அண்ணாமலை அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

இதற்கிடையே, பிரதமரின் முதல் கையெழுத்தே விவசாயிகளின் நலன் சார்ந்ததாக உள்ளது வரவேற்கத்தக்கது என்று திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - விவசாயி – 22 செகண்ட்ஸ்)*

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டம் தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று நாமக்கல்லை சேர்ந்த விவசாயி கூறினார்.

*(சவுண்ட் பைட் - விவசாயி – 22 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஏழை, இளையோர், விவசாயிகள் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றார்.

வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதில் பிரதமர் உறுதியுடன் உள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் இடையே கருத்து வேறுபாடுகள் எதுவும் இல்லை என்றும் திரு கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மத்திய இணையமைச்சர் பதவியை ராஜினாமா செய்யப்போவதாக வெளியான செய்திகள் தவறானவை என்று நடிகர் திரு சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

சமூக வலை஌தத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ் கேரளாவின் வளர்ச்சிக்காக பணியாற்ற வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

தமிழகத்தின் முதலமைச்சராக திரு மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பின்னர், ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினரால் நிறுவப்படும் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கென 80 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் வாயிலாக 38 நிறுவனங்களுக்கு முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

மூன்றாவது முறையாக பிரதமராக பொறுப்பேற்றுள்ள திரு நரேந்திர மோடி சமூக நீதி சார்ந்த கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எளிய குடும்பத்தில் பிறந்த திரு நரேந்திர மோடி, ஜவஹர்லால் நேருவுக்கு பிறகு தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவியேற்ற பிரதமர் என்ற சாதனையை படைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாநிலங்களின் பல்வேறு கோரிக்கைகளையும் பிரதமர் நிறைவேற்ற வேண்டும் என்று திரு ராமதாசு அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<<<>>>>>>

மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய குற்றவியல் சட்டங்களுக்கு வழக்கறிஞர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

தற்போது செயல்பாட்டில் உள்ள குற்றவியல் சட்டங்களில் பல்வேறு பிரிவுகள் நீக்கப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக சென்னையை சேர்ந்த வழக்கறிஞர் திரு வசந்தகுமார் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - வசந்தகுமார் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, கொடைக்கானலில் பள்ளி மாணவர்களுக்கு இன்று யோகா பயிற்சி வழங்கப்பட்டது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - ராஜசேகரன் - 26 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், சில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் குறிப்பிட்டார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 41 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று மாலை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

நீலகிரி மாவட்டம் கூடலூரில் பெய்த மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரை மாவட்டம் ஊமச்சிக்குளம் அரசு நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்களை வழங்கிய ஆட்சியர் திருமதி சங்கீதா ஆதார் பதிவு முகாமையும் தொடங்கிவைத்தார்.

---------------

நாமக்கல் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாமில் பங்கேற்ற ஆட்சியர் திருமதி உமா பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் திரு தர்பகராஜ் அறிவுறுத்தினார்.

-------------

சேலம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஐந்தாம் கட்டமாக கோமாரி தடுப்பூசி செலுத்தும் முகாமினை ஆட்சியர் திருமதி பிருந்தா தேவி இன்று தொடங்கிவைத்தார்.

------------------

ராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்று தொடங்கி, அடுத்த மாதம் 10-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திரு விஷ்ணு சந்திரன் கூறியுள்ளார்.

---------------

சென்னை விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின்போது 8 கோடி ரூபாய் மதிப்பிலான தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

**Portland** சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Gulveer Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஐந்தாயிரம் மீட்டர் ஓட்டப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**<<<<<<<END>>>>>>**